ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 157/7 — 1975 අප්‍රේල් 01 වැනි අඟහරුවාදා — 1975.04.01

157/7 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 10/59

**1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டம்**

1967 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 6(1) என்னும் பிரிவின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் நிதியமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1975, ஏப்பிரல் மாதம் 01 ஆந் தேதி.

**கட்டளை**

1. கொழும்புத் தேயிலை ஏலமொன்றில், அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வெளி நாட்டுத் தேயிலை ஏலமொன்றில் விற்கப்படும் ஏதேனும் தேயிலை தொடர்பில், 1967 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரிவிதித்த லும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்படும் வரியானது—

(1) அத்தகைய தேயிலை விற்கப்படும் விலை இலங்கை நாணயத்தின்படி குறிப்பிட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கழிவுகளைச் செய்தபின்னர் இறாத்தலொன்றுக்கு இரண்டு ரூபா ஐம்பது சதமாக அல்லது அதற்குக் குறைவாக இருக்குமிடத்து, நீக்கப் படுதல் வேண்டும்; அத்துடன்

(2) அத்தகைய விலை, அல்லது அச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் மதிப்பிடப்பட்ட விலை கிலோகிராமொன்றுக்கு ஐந்து ரூபா ஐம்பது சதத்துக்கு மேற்பட்டதாயிருக்குமிடத்து, அச்சட்டத்தின் 2 ஆம், 5 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலும் கணக்கிடும் முறைக்கிணங்கவும் இருப்பதற்குப் பதிலாக பின்வரும் முறையாக விதிக்கப்பட்டு அற விடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும் :—

(அ) அத்தகைய மேலதிகத்தொகை நாலு ரூபா நாற்பது சதத்துக்கு மேற்படாததா யிருக்குமிடத்து, வரியானது அம்மேலதிகத் தொகையின் அரைவாசிக்குச் சம மானதாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மேலதிகத்தொகை நாலு ரூபா நாற்பது சதத்துக்கு மேற்பட்டதா யிருக்குமிடத்து, வரியானது இரண்டு ரூபா இருபது சதத்துக்குச் சமமானதா தல் வேண்டும்.

2. 1967 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 6(1) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1974, நவம்பர் 07 ஆந் தேதிய 136/10 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளி யிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ளவாறுள்ள கட்டளை இத்தால் நீக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.